மருந்து ஷாப் வைக்க 10,000 ரூபாய் கொடுக்கிறோம். பிரிண்டிங் பிரஸ் வைக்க 5,000 ரூபாய் கொடுக்கிறோம். காஸ் வெல்டிங்குக்கு 3,000 ரூபாய் கொடுக்கிறோம். டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் வைக்க 3,000 ரூபாய் கொடுக்கிறோம். அந்தந்தத் தொழிலுக்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது பொருள்களாகவே வாங்கிக் கொள்வதாக இருந்தால் அந்தப் பொருளுக்கான பணத்தை அரசு கொடுத்து விட்டு சாமானை வாங்கி பில்லை அவர்களிடம் கொடுத்து விடுகிறோம். அந்த முறையிலும் பொருள்களைப் பெற்று அவர்கள் தொழிலை நடத்து கிறார்கள்.

திரு. எஸ். முருகையன்: அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடிய வட்டி இல்லாத கடன்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது? ஒதுக்கப்பட்ட தொகை அவ்வளவும் அரிசனங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை யென்றால் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: துவக்கத்தில் பத்தாயிரம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டது. பிறகு ஒரு லட்ச மாகி கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் பத்து லட்சம் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணம் போதவில்லை என்ற குறைதான் இருக்கிறதே தவிர மிச்சம் ஒன்றும் இல்லை. நிறையப் பேருக்குக் கொடுப்பதால் சில பேருக்குப் பணத்தைக் குறைத்துக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் அரிசன மக்கள் பெரும் பயன் அடைகிறார்கள். இதற்கு இந்த பத்து லட்சத் திற்கும் அதிகமாக தொகை ஒதுக்கும் திட்டமும் இருக்கிறது.

திரு. என். இராஜாங்கம்: இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் மிகவும் குறைவு என்பது எல்லோருக்கும் தெரியும். இதிலே மாவட்டத்திற்கு ஐந்து விண்ணப்பங்களுக்கு மேல் பரிசீலனை செய்து கடன் கொடுக்கக்கூடிய நிலை இல்லை. நூற்றுக்கு ஐந்து பேருக்குத்தான் கிடைக்கிறது. 95 பேருக்குக் கிடைப்ப தில்லை. மாவட்டந்தோறும் நிலைமையை ஆராய்ந்து பரவலாக ஆங்காங்கு 15 பேராவது இந்த உதவியைப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டால்தான் நாம் செய்கிற திட்டத்தின் பலன் மக்களுக்குப் புரியும். அந்தந்த மாவட்டத்தில் கலெக்டர், வெல்பேர் ஆபீசர் ஆகியவர்களைக் கொண்டு ஆங்காங்குள்ள நிலையைப் பரிசீலனை